***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXV BNSS)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT***
***Mannargudi***
***CC.No. 1189/2025 – P.W. 1 (LW1)***

| | |
|---|---|
| *Name* | சுதா |
| *Father/Husband's Name* | க/பெ. ஜவஹர் |
| *Village* | பழஞ்சேரிமேடு |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | 37 |

**எதிரி நீதிமன்ற காவலில் இருந்து காணொளி மூலம் ஆஜர் படுத்தப்பட்டுள்ளார். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 17.03.2026.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் திருவாரூர் அரசு மருத்துவமனையில் செவிலியராக பணியாற்றி வருகிறேன். காணொளி மூலம் ஆஜர்படுத்தப்பட்ட எதிரியை எனக்கு தெரியும். எனது அப்பா வீட்டில் இருந்து நான்கு வீடு தள்ளி தான் அவரது வீடு உள்ளது.

நான் நீடாமங்கலம் தாலுக்கா, பழஞ்சேரி கிராமத்தில் எனது அப்பாவுடன் வசித்து வருகிறேன். எனது கணவர் ஜவஹர் எட்டு வருடங்களுக்கு முன்பு வெளிநாட்டில் வேலை செய்யும் போது இறந்துவிட்டார். அது முதல் நான் எனது அப்பா வீட்டில் தான் வசித்து வருகிறேன். நான் தினந்தோறும் பழஞ்சேரிமேடு கிராமத்தில் இருந்து அம்மாபேட்டை போகும் வழியில் சென்று அம்மாப்பேட்டை வண்டி ஸ்டாண்டில் வண்டியை போட்டுவிட்டு திருவாரூர் மருத்துவகல்லூரி மருத்துவமனைக்கு பணிக்கு செல்வேன். கடந்த 05.11.2025 ம் தேதியன்று புதன்கிழமை காலை 04.50 மணிக்கு நான் அதுபோல் சென்றபோது பழஞ்சேரிமேடு ரோட்டில் கிழக்கில் இருந்து மேற்காக ஐயர் வயல் களத்தடி அருகே என்னுடைய இருச்சக்கர வாகனத்தில் சென்றுகொண்டிருந்தபோது அந்த ரோட்டின் நடுவே அரிவாளை காட்டிக்கொண்டு

ஒரு நபர் வழியை மறித்தார். நான் எனது இருச்சக்கர வாகனத்தை மெதுவாக இயக்கி யார் என்று பார்க்கும்போது எனது வீட்டிற்கு 4 வீடுகள் தள்ளி இருக்கும் சேகர் மகன் சுரேஷ் என்பது எனக்கு தெரியவந்தது. நான் அவரை பார்த்தவுடன் என்னை எதுவும் செய்துவிடாதே என்று அழுதேன். அவர் எனது இருச்சக்கர வாகனத்தின் பின்பக்க சக்கரத்தை காலால் உதைத்து கீழே தள்ளியதில் நானும் கீழே விழுந்துவிட்டேன். உடனே அரிவாளை காட்டி என் கழுத்தில் இருக்கும் செயினை கழட்டி கொடு என்று கத்தினார். நான் எனது வீட்டிலே சாப்பிட்டுவிட்டு இவ்வாறு செய்கிறாயே என்று அழுதேன். உடனே என்னுடைய தலையில் அரிவாளால் வெட்டினார். நான் திரும்பும் போது என்னுடைய இடது பக்க கண்ணத்தில் அரிவாளால் வெட்டினார். (சாட்சி திறந்தவெளி நீதிமன்றத்தில் இடது கண்ணத்தில் உள்ள வெட்டு தழும்பை காண்பிக்கிறார்). மீண்டும் செயினை கழட்டி கொடுக்கவில்லை என்றால் உன்னை கொன்றுவிடுவேன் என்று கூறி அரிவாளை பின்பக்கத்தால் தலையில் அடித்தார். நான் கையை வைத்து தடுத்தபோது எனது வலது கையில் வெட்டுக்காயம் ஏற்பட்டது. இடது கையில் இரத்தக்கட்டு ஏற்பட்டு வீங்கியது. (சாட்சி மீண்டும் திறந்தவெளி நீதிமன்றத்தில் இரண்டு கைகளிலும் உள்ள வெட்டு மற்றும் காயதழும்புகளை காண்பிக்கிறார்). நான் அதில் பயந்துபோய் எனது கழுத்தில் கிடந்த 5 1/2 பவுன் முறுக்கு செயின் மாடல் மற்றும் டாலருடன் கூடிய செயினை கழட்டி எதிரியிடம் கொடுத்துவிட்டேன். இதை யாரிடமாவது கூறினார் உன்னை கொன்றுவிடுவேன் என்று கூறி என்னை தாக்கவந்தார். நான் தடுத்தேன். செயினை வாங்கிகொண்டு அருகில் இருந்த ஐயர் களத்தடி வயல் வழியாக ஓடிவிட்டார். பிறகு நான் என்னுடைய இருச்சக்கர வாகனத்தில் இருந்த செல்போனை எடுத்து எனது அப்பாவிற்கு போன் செய்து வரவழைத்தேன். எனது அப்பாவும், எனது எதிர்வீட்டுக்காரர் சுமதியும் சம்பவ இடத்திற்கு வந்து 108 ஆம்புலென்சு மூலமாக வடுவூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு அழைத்து சென்றார். அங்கு எனக்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டு மேல்சிகிச்சைக்காக திருவாரூர் மருத்துவகல்லூரி மருத்துவமனைக்கு பரிந்துரைக்கப்பட்டது. மேற்படி மருத்துவமனையில் என்னை தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதித்து தலையில் ஏற்பட்ட வெட்டுக்காயத்திற்கு 18 தையலும், இடது கண்ணத்தில் ஏற்பட்ட காயத்திற்கு 8 தையலும், வலது கையில் ஏற்பட்ட வெட்டுக்காயத்திற்கு 4 தையலும் போட்டார்கள். இடது கையில் இருந்த இரத்தகட்டிற்கு IND சிகிச்சை அளிக்கப்பட்டது. நான் தீவிர சிகிச்சை பிரிவில் 5 நாட்களும், General ward ல் 6 நாட்கள் என 11 நாட்கள் உள்நோயாளியாக

சிகிச்சையில் இருந்தேன். அங்கு சிகிச்சையில் இருக்கும்போது போலீசார் என்னை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்றுக்கொண்டனர்.

2. நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் கொடுத்ததுதான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். **(புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள நகைகள் தான் எதிரி என்னிடம் பறித்து சென்ற நகை ஆகும். **அது அசா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. மேற்படி நகையை சாட்சி கழுத்தில் அணிந்துள்ளார். எதிரி பறித்து சென்ற என்னுடைய நகையை பத்து நாட்கள் கழித்து நீதிமன்றத்தில் மனு செய்து பெற்றுக்கொண்டேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் முதல் விசாரணையில் சொன்ன தகவலை தான் போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். என்னை மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் போது நான் சுயநினைவுடன் இருந்தேன் என்றால் சரிதான். எனக்கு அறுவைசிகிச்சை எப்போது செய்யப்பட்டது என்றால் வழக்கு சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும் தினத்தன்று காலை 08.00 மணியளவில் நடைபெற்றது. மருத்துவ அறுவை சிகிச்சை என்பது மயக்கமருந்து செலுத்தி அதன் பின்னர் தான் அறுவை சிகிச்சை செய்வார்கள் என்றால் சரிதான். எனக்கு மயக்கம் மருந்து கொடுத்து எப்போது சுயநினைவு வந்தது என்றால் அறுவை சிகிச்சை முடிந்த பின்னர் எனக்கு சுயநினைவு வந்தது.

எனக்கு மயக்கமருந்து செலுத்தி தான் அறுவை சிகிச்சை செய்தார்கள் என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பந்தமாக எப்போது என்னை போலீசார் விசாரித்தார்கள் என்றால் சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும் தினத்தன்று மதியம் 01.00 மணியளவில் என்னை இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் விசாரித்தார்கள். என்னுடைய புகார் வாக்குமூலம் தாலிச்செயினின் மதிப்பு 7 1/2 என்று சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. புகார் வாக்குமூலத்தில் நகையின் மதிப்பில் திருத்தம் இருப்பதை நான் பார்த்தேனா என்றால் அதில் 5 1/2 பவுன் தான் என்று இருந்தது.

புகார் வாக்குமூலமானது என்னிடம் வாங்கப்பட்டது அல்ல என்றாலும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல. நான் மருத்துவ சிகிச்சையில் இருந்தபோது 1 முறை வந்து போலீசார் என்னை விசாரித்தாரகள்.

அதன் பிறகு தொலை பேசியில் தான் என்னை விசாரித்தார்கள். எனது வீட்டிற்கு வந்து நேரடியாக என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். வழக்கு சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தை அடையாளம் காண்பிக்க என்னை அழைத்து சென்று விசாரித்தார்களா என்றால் இல்லை.

எனது பழஞ்சேரிமேடு கிராமத்தில் இருந்து அம்மாப்பேட்டை மெயின்ரோடு செல்ல 8 கிமீ தூரம் இருக்கும் என்று சொன்னால் சரிதான். எனது முதல் விசாரணையில் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரம் 04.50 என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நவம்பர் மாதம் என்பதால் பனி சூழந்து இருள் சூழ்ந்த நேரமாக தான் உள்ளது என்றால் இல்லை. ரோடு முழுவதும் street light இருந்தது. போலீசார் விசாரணையில் நான் எனது அப்பா தினந்தோறும் walking செல்லும் பாதையை கடந்து செல்வேன் என்று சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன்.

நான் தினந்தோறும் செல்லும் சாலை ஒரு பக்கம் வாய்கால் பகுதி, ஒரு பக்கம் வயல் பகுதி என்றால் சரிதான். ரோடு, வாய்கால், வயல் எல்லாம் சமமாக தான் இருக்கும். எதிரிக்கும், எனக்கும் சகஜமான பேச்சு வார்த்தை உள்ளதா என்றால் இல்லை. நான் மருத்துவ சிகிச்சையில் இருந்து வெளியே வந்த பிறகு அடையாள அணிவகுப்பு எதுவும் போலீசாரால் நடத்தப்பட்டதா என்றால் இல்லை. அரிவாளின் நீள அகலம் குறித்து என்னிடம் கேள்வியை முன்வைத்து விசாரணை அதிகாரி விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். அதுபோல் எந்த கேள்வியையும் என்னிடம் முன்வைக்கவில்லை என்றால் சரியல்ல.

நான் சொல்வதுபோல் எதிரி என்னை தாக்கவில்லை என்றாலும், எதிரி என்னிடம் இருந்து எந்தவித செயினையும் பறிக்கவில்லை என்றாலும் சரியல்ல. நான் எதிரியை முன்கூட்டியே தெரிந்துகொண்டு ஏதோவொரு முன்விரோதத்திற்காக எதிரி மீது பொய்யாக புகார் வாக்குமூலம் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு நகையின் பவுன் மதிப்பிற்கும், கிராம் மதிப்பிற்கு உள்ள வேறுபாடு தெரியுமா என்றால் தெரியும். எதிரியை நான் பார்ககவில்லை என்றாலும் உத்தேசத்தின் பேரில் எதிரி மீது பொய் புகார் வாக்குமூலம் கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. இந்த வழக்கில் என்னை போலீசாரும் சரிவர விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. என்னை சரிவர விசாரணை செய்திருந்தால் உரிய சட்டப்பிரிவின் கீழ் வழக்கு தாக்கல் செய்திருப்பார்கள் என்றால் சரியல்ல. நான் கொடுத்த புகார் வாக்குமூலம் பொய் என்பதால் தான் பெயரளவில்

முதல் தகவல்அறிக்கை இந்த எதிரி மீது பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயம் அனைத்தும் நானே வண்டியில் இருந்து தவறி விழுந்து தானாக ஏற்படுத்திக்கொண்ட காயம் என்றால் சரியல்ல.

Sd/--J. Tamizhmurugan,

Judicial Magistrate No.I,
Mannargudi.

## *DEPOSITION OF WITNESS*
## ***(Chapter XXV BNSS)***

## ***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT Mannargudi***
## ***CC.No. 1189/2025 – P.W. 2 (LW2)***

| | |
|---|---|
| *Name* | பேச்சிமுத்து |
| *Father/Husband's Name* | பக்கிரிசாமி |
| *Village* | பழஞ்சேரிமேடு |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | *70* |

**எதிரி நீதிமன்ற காவலில் இருந்து காணொளி மூலம் ஆஜர் படுத்தப்பட்டுள்ளார். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 17.03.2026.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். காணொளி மூலம் ஆஜரான எதிரியை எனக்கு தெரியும். எனது வீட்டில் இருந்து நான்காவது வீடு தான்.

எனது மகள் வீட்டில் இருந்து TN50 AR 5341 என்ற பதிவெண் கொண்ட Scooty ல் புறப்பட்டு அம்மாபேட்டை சென்று ஸ்டேண்டில் Scooty ஐ போட்டுவிட்டு திருவாரூர் மருத்துவகல்லூரி மருத்துவமனைக்கு தினந்தோறும் பணிக்கு செல்வார். கடந்த 05.11.2025 ம் தேதியன்று அதிகாலை 04.50 மணிக்கு அவ்வாறு செல்லும்போது பழஞ்சேரிமேட்டில் இருந்து அம்மாப்பேட்டை செல்லும் ரோட்டில் நான் walking போகும் போது என்னை கடந்து தான் எனது மகள் சென்றார். நான் சென்றுகொண்டிருந்தபோது எனது மகள் செல்போனில் அழைத்து சுரேஷ் என்னை வெட்டிவிட்டார் என்று கூறினார். நான் சம்பவ இடத்திற்கு சென்று பார்த்தபோது எனது மகளின் தலை மற்றும் இடது கண்ணம் வலது கை மற்றும் இடது கை வெட்டுக்காயம் ஏற்பட்டு இருந்தது. இரத்தம் வழிந்து கொண்டிருந்தது. நான் என்ன

என்று கேட்டபோது என் மகள் சென்ற வழியை மறித்து கொண்டு சுரேஷ் அரிவாளுடன் நின்று கொண்டிருந்ததாகவும் எனது மகள் பயந்துகொண்டு வண்டியை நிறுத்தவும் சுரேஷ் காலால் வண்டியை எட்டி உதைத்தாகவும், வண்டியுடன் ரோட்டிற்கு பக்கத்தில் சேரில் விழுந்ததாகவும், செயினை கழட்டி கொடுக்குமாறும் இல்லையென்றால் உன்னை கொன்றுவிடுவேன் என்று மிரட்டி வெட்டியிருக்கிறார். எனது மகள் பயந்துகொண்டு அவருடைய செயினை கழட்டி கொடுத்துவிட்டார். அந்த செயின் மதிப்பு டாலருடன் 5 1/2 பவுன் ஆகும். பின்னர் ஊரில் இருந்து சிலர் வந்துவிட்டனர். பிறகு 108 ஆம்புலன்சு மூலமாக எனது மகளை அழைத்துக்கொண்டு வடுவூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு அழைத்து சென்றேன். அங்கு அவருக்கு முதலுதவி சிகிச்சை அளித்துவிட்டு கார் மூலமாக திருவாரூர் மருத்துவகல்லூரி மருத்துவமனைக்கு மேல்சிகிச்சைக்காக அழைத்து சென்றேன். அவர் தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சையில் இருந்தார். அங்கு போலீசார் என்னை விசாரித்தார்கள். நடந்த விபரங்களை கூறினேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் முதல் விசாரணையில் சொன்ன தகவல் அனைத்தும் எனது மகள் சொல்லி தான் தெரியும் என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தினத்தன்று எனது மகள் என்னை கடந்து தான் சென்றார் என்றால் சரிதான். அவருடைய இருச்சக்கர வாகனத்தின் முகப்பு விளக்கு சம்பவ நடந்நததாக சொல்லப்படும் இடத்தில் எரியவில்லை. வண்டியை உதைத்து தள்ளியவுடன் தான் எரியவில்லை. போலீசார் எனது மகளின் இருச்சக்கர வாகனத்தை வந்து பார்த்தார்களா என்றால் போலீசார் வயலில் கிடந்த வண்டியை பார்த்தார்கள். ரோட்டிற்கும், வயலுக்கும் எவ்வளவு தூரத்தில் வண்டி கிடந்தது என்றால் பக்கத்திலே தான் கிடந்தது. ரோட்டிற்கும், வயலுக்கும் எவ்வளவு பள்ளம் என்றால் 3, 3 1/2 அடி இருக்கும்.

அன்றையதினம் தெருவிளக்கு எரிந்து கொண்டிருந்ததா என்றால் எரிந்து கொண்டிருந்தது. போலீசார் என்னிடம் வந்து வாகனத்தை வாங்கி கொண்டார்களா என்றால் வயலில் கிடந்த வண்டியை எடுத்து வீட்டில் போட்டுவிட்டு சென்றுவிட்டார்கள்.

நான் சொல்வதுபோல் எனது மகளுக்கு வண்டியில் இருந்து வயலுக்குள் தானாக தவறி விழுந்ததால் தான் காயங்கள் ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. எதிரி என் மகள் ஓட்டி சென்ற வண்டியை எட்டி உதைத்தார் என்று சொல்லியுள்ளதை

வழக்கிற்காக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி என் மகளிடம் இருந்து எந்தவிதமான செயினையும் பறிக்கவும் இல்லை என்றாலும், தாக்கவும் இல்லை என்றாலும் சரியல்ல. எதிரிக்கும் எங்கள் குடும்பத்திற்கும் முன்விரோதம் கிடையாது. ஆனால் பேச்சுவார்த்தை இல்லை. எனது மகள் சந்தேகத்தின் பேரில் எதிரி மீது பொய் புகார் கொடுத்துள்ளார் என்றாலும், எனது மகளுக்காக பொய்யாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. இந்த வழக்கு சம்பவம் உண்மை அல்ல என்றாலும் பொய் என்பதால் தான் இருச்சக்கர வாகனத்தை எங்களிடம் இருந்து கைப்பற்றி வழக்கு விசாரணையில் சேர்க்கவில்லை என்றாலும் சரியல்ல. இந்த வழக்கிற்கும், எதிரிக்கும் எந்தவித சம்மந்தம் இல்லை என்றாலும் சரியல்ல.

Sd/--J. Tamizhmurugan,
Judicial Magistrate No.I,
Mannargudi.

***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXV BNSS)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT Mannargudi***
***CC.No. 1189/2025 – P.W. 3 (LW3)***

| | |
|---|---|
| *Name* | சுமதி |
| *Father/Husband's Name* | க/பெ. இளங்கோவன் |
| *Village* | பழஞ்சேரிமேடு |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | 48 |

**எதிரி நீதிமன்ற காவலில் இருந்து காணொளி மூலம் ஆஜர் படுத்தப்பட்டுள்ளார். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 17.03.2026.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் சமையல் வேலை செய்து வருகிறேன். அசா.1 ஐ தெரியும். காணொளி மூலம் ஆஜரான எதிரியை எனக்கு தெரியும். எனது வீட்டில் இருந்து கிழக்கே நான்கு வீடுகள் தள்ளி அவருடைய வீடு உள்ளது.

2. அசா.1 வீட்டில் இருந்து TN50 AR 5341 என்ற பதிவெண் கொண்ட Scooty ல் புறப்பட்டு அம்மாபேட்டை சென்று ஸ்டேண்டில் Scooty ஐ போட்டுவிட்டு திருவாரூர் மருத்துவகல்லூரி மருத்துவமனைக்கு தினந்தோறும் பணிக்கு செல்வார். கடந்த 05.11.2025 ம் தேதியன்று அதிகாலை 04.50 மணிக்கு வீட்டில் இருந்து புறப்பட்டு சென்றார். 05.00 மணிக்கு என்னை அசா.1 தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு

ஐயர் வயல் அருகே என்னை சேகர் மகன் சுரேஷ் வெட்டி விட்டான் என்றும், என்னை வந்து காப்பாத்துங்கள் என்றும், எனக்கு அம்மா கிடையாது என்னை உடனே காப்பாத்துங்கள் என்று என்னிடம் அழுதது நான் உடனடியாக சம்பவ இடத்திற்கு சென்று பார்த்தபோது அசா 1ன் தலையில் வெட்டுப்பட்டு ரத்தம் வழிந்தது. மேலும் இடது கன்னத்திலும், வலது கையிலும் வெட்டுக்காயம் இருந்தது , இடது கையில் ரத்தக்கட்டு ஏற்பட்டு வீங்கி இருந்தது . பிறகு 108 ஆம்புலன்சை வரவழைத்து வடுவூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு அழைத்து சென்று முதலுதவி சிகிச்சை அளித்து பின்னர் திருவாரூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றோம். அசா 1 தீவிர சிகிச்சையில் அனுமதிக்கப்பட்டிருந்தார் நான் இரண்டு நாட்கள் மட்டும் அவருடன் இருந்தேன். அங்கு போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1) இந்த வழக்கு சம்பவம் கேள்விப்பட்டுதான் தெரியும். நேரடியாக தெரியாது. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் சுமார் 50 பேர் கூடியிருந்தோம் என்றால் சரிதான். நாங்கள் அங்கு கூட்டமாக இருந்தபோது போலீசார் அங்கு வரவில்லை. வடுவூர் ஆரம்ப சுகாதாரநிலையத்திற்கு வந்திருந்தார்கள். நான் சென்று பார்த்தபோது இருசக்கர வாகனம் ரோட்டிலிருந்து 4 அடி துாரத்தில் வயல் பள்ளத்தில் கிடந்தது. எதிரிக்கும் அசா 1 குடும்பத்திற்கு ஏதாவது பேச்சு வார்த்தை இருந்ததா என்றால் அதெல்லாம் கிடையாது. அசா 1 எனது வீட்டிற்கு எதிர்வீடு என்றால் சரிதான். உறவினர் இல்லை. என்னை போலீசார் வடுவூர் ஆரம்ப சுகாதாரநிலையத்திலும், விசாரித்தார், திருவாரூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையிலும் விசாரித்தார்கள். திருவாரூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அசா1-டன் இரண்டு நாட்கள் தங்கியிருந்தேன்.

2) நான் அசா1டன் மருத்துவமனையில் தங்கவில்லை என்றும், போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. அசா 1 எனது வீட்டிற்கு எதிர் வீடு என்பதால் அவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க அவருக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. அசா1க்கு ஏற்பட்ட காயங்கள் அனைத்தும் அசா1 சொன்ன வகையில் ஏற்படவில்லை என்றும், வண்டியிலிருந்து கீழே விழுந்ததால்தான் ஏற்பட்டது என்றும், அதனை மறைத்து அசா1க்கு ஆதரவாக பொய்சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/--J. Tamizhmurugan,
Judicial Magistrate No.I,
Mannargudi.